முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

புதைவடக் கம்பி

***5926—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, 174—வது வார்டு, காமராஜ் நகர் மற்றும் நேரு நகர் ஆகிய பகுதிகளில் மேலே செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதியில் அடங்கிய 174—வது வார்டில், காமராஜ் நகர், நேரு நகர் ஆகிய பகுதிகளில் மேலே செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1996 ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய மேயராக தளபதி அவர்கள் சென்னையில் இருந்தபோது, சென்னை*

மாநகரில் உயிருக்கு ஆபத்து விளைவித்துக் கொண்டிருக்கிற உயரழுத்த மின் கம்பிகளை தரையில் புதைத்திட வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் வலுப்பெறப்பெற்று, படிப்படியாய் தற்போது சென்னை மாநகர் முழுவதும் சுமார் 70 முதல் 80 சதவிகிதப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்தவகையில், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 174–வது வார்டு காமராஜ் நகரிலுள்ள கங்கையம்மன் கோயில் தெரு, மருதுபாண்டி சாலை, காந்தி தெரு, பாரதி தெரு, கண்ணகி தெரு, கணபதி தெரு ஆகிய இடங்களிலும், நேரு நகரிலே இருக்கிற பெரியார் தெரு, வீரபாண்டிய கட்டபொம்மன் தெரு, அன்பில் தர்மலிங்கம் தெரு, மாதவன் தெரு, நெடுஞ்செழியன் தெரு போன்ற இடங்களிலும், மடுவின்கரையிலுள்ள பிள்ளையார் கோயில் தெரு, மகாலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ் போன்ற இடங்களிலும் மேலே செல்கிற உயரழுத்த மின் கம்பிகள் இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்த மின் கம்பிகளை தரைக்கு அடியில் புதைக்கும் பணியினை விரைந்து செயல்படுத்தி முடிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகள், 174–வது வார்டு, காமராஜ் நகர், நேரு நகர் பகுதியில் உள்ளடங்கிய பகுதி என்று நினைக்கின்றேன். அந்தப் பகுதியில்தான் தற்போது பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதி மொத்தம் 4 கிலோ மீட்டர் நீளத்தில் அமைந்துள்ள பகுதியாகும். கிட்டத்தட்ட 2 முதல் 4 மாத காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2015 ஆம் ஆண்டு சென்னை மாநகரம், சென்னைப் பெருநகர மாநகராட்சியாக மாறியபோது, 8

2017 ஜூலை 4]

நகராட்சிகள், 9 பேரூராட்சிகள், 25 ஊராட்சிகளை ஒருங்கிணைத்து, பெருநகர சென்னை மாநகராட்சியாக மாற்றப்பட்டது. அப்போது, திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து 61 வட்டங்களும், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து 32 வட்டங்களும் சேர்க்கப்பட்டு, புதிதாக 93 வட்டங்கள் மாநகராட்சியின் பகுதியாக ஏற்கெனவே இணைக்கப்பட்டு, சென்னை பெருநகர மாநகராட்சியாக உருவாக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த 155 வட்டங்கள் 107 வட்டங்களாகச் சுருக்கப்பட்டு, மொத்தத்தில் தற்போது 200 வட்டங்களாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே இருக்கிற 107 வட்டங்களில் உயரழுத்த மின் கம்பிகளை தரைக்கு அடியில் புதைக்கும் பணிகள், அதாவது 70, 80 சதவிகித அளவில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், மீதம் இருக்கிற 93 வட்டங்களில், குறிப்பாக, ஆலந்தூர், அம்பத்தூர், திருவொற்றியூர், மாதவரம் உள்ளிட்ட 8 நகராட்சிகளிலும், 9 பேரூராட்சிகளிலும், 25 ஊராட்சிகளிலும், மேலும் சென்னையோடு இணைக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியாக மாறியுள்ள இந்தப் பகுதிகளிலும் மேலே செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை தரைக்கு அடியில் புதைத்தால் மட்டுமே உண்மையில் பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயருக்கு இலக்கணமாய் அமையும். எனவே, இந்தப் பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து முடிப்பார்களா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரிவாக்கப்பட்ட பகுதியைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 2,004 கிலோ மீட்டர் அளவிற்கு உயரழுத்த மின் பாதைகளும், அதேபோல, 33,307 கிலோ மீட்டர் அளவிற்கு தாழ்வழுத்த மின் பாதைகளும் இருக்கின்றன. நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதே, ரூபாய் 2,567 கோடி அளவிற்கு நிதியைப் பெற்றிருக்கின்றோம் என்றும், அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும் தெரிவித்திருந்தேன். இன்னும் இரண்டு ஆண்டுகளில் இந்தப் பணியை முடித்துவிடுவோம் என்று நினைக்கின்றேன். பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு*

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை தமிழக மக்களின் நல் ஆதரவுடன் வழி நடத்திச் செல்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். விருகம்பாக்கம் தொகுதி, 128—வது வட்டத்தில், இந்திரா நகர் 1—வது தெரு, 2—வது தெரு, 3—வது தெரு, 4—வது தெரு, 5—வது தெரு மற்றும் பல குறுக்குத் தெருக்கள் உள்ளன. அந்தச் சாலைகள் மிகவும் குறுகிய சாலைகளாக இருக்கின்றன. அந்தச் சாலைகளில் உயரழுத்த மின் கம்பிகள் மேலே செல்கின்ற காரணத்தால், அதை அகற்றி, பூமிக்கடியில், UG கேபிள் அமைத்துத் தர வாய்ப்பு உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதியை 'வர்தா' புயலின்போது நாங்கள் ஆய்வு செய்கின்றபோதே குறுகிய வீதியாக இருந்தது. அந்தப் பகுதி மக்களும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அன்றையதினம் கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில் ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முன்னுரிமை அடிப்படையில் எந்தெந்தப் பகுதிகளுக்குத் தேவையோ அந்தந்தப் பகுதிகளில் புதைவடங்களாக மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

2017 ஜூலை 4]

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாம்பன் மற்றும் நாகப்பட்டினம் போன்ற கடற்கரையோர மாவட்டங்களில் புயல் காலங்களில் உயரழுத்த மின் கம்பிகளால் மிகப் பெரிய பலத்த சேதம் ஏற்படுகின்றது. எனவே, அந்தப் பகுதிகளில் பூமிக்கடியில் புதைவடங்கள் அமைப்பதற்கான திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக, திருவாரூர் போன்ற தேரோடும் வீதிகளில் பூமிக்கடியில் புதைவடங்கள் அமைக்கப்படுவதற்கான திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையினுடைய பதிலுரையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். வேளாங்கண்ணி, கடலூர் போன்ற பகுதிகள் மற்றும் புயலால் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற பகுதிகளில் புதைவடங்களாக மாற்றுவதற்கு டெண்டர் கோரப்பட்டுள்ளது. இன்னும் ஒருவார காலத்தில் அந்தப் பணிகள் நடைபெறும் என்று நான் அப்பொழுதே சொல்லியிருந்தேன். ஆகவே, அந்தப் பணிகள் நடைபெறும்.*

மேலும், திருவாரூர் தேரோடும் பகுதிகளில் புதைவடமாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடமலைமயிலை ஒன்றியம், மஞ்சனூத்திலிருந்து வெள்ளிமலை வரை 36 கிலோ மீட்டருக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டது. அது வனப் பகுதியில் செல்வதால் அந்த மின் கம்பங்களின் வயர்கள் அறுபட்ட நிலையில் இருக்கின்றன. அதற்கு*

மாற்றாக பூமிக்கடியில் கேபிள்மூலம் அந்த மின்னிணைப்பைக் கொடுத்தால், வெள்ளிமலை எஸ்டேட் பகுதியில் இருக்கக்கூடிய டீ எஸ்டேட், காபி எஸ்டேட் போன்றவை செழிப்படையும். அதைச்சார்ந்து, பக்கத்தில் இருக்கும் கிராமங்களுக்கும் மின்னிணைப்பு வழங்குவதற்கு வசதியாக இருக்கும். அரசு இதைச் செய்ய முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஆண்டிப்பட்டி பகுதி மலைப் பகுதியாக இருக்கின்றது. மலைப் பகுதியில் மின் கம்பிகளை புதைவடமாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், முதலில் அதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அந்த மலைப் பகுதியில் சாலையோரமாகக் கம்பங்களை அமைத்தால்தான் அது எளிதாக இருக்கும். மலைப் பகுதி மேடு, பள்ளங்களாக இருக்கின்ற காரணத்தால், மின் கம்பிகளை புதைவடமாக மாற்றுகின்றபோது செலவும் அதிகமாகும். மேலும், வனத்துறையிடம் NOC வாங்குவது மிகவும் சிரமமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பகுதி முக்கியமான பகுதியாக இருந்தால் அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி, 57—வது வட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆண்டாள் நகர் விரிவு பகுதியில் சாலையிலிருந்து சுமார் 20 அடி உயரத்தில் உயரழுத்த மின் கம்பிகள் நீண்ட நாட்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. இதன்காரணமாக மாநகராட்சியால் செயல்படுத்தப்பட வேண்டிய தார்ச் சாலைப் பணிகள், பாதாளச் சாக்கடை கட்டுமானப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் உள்ளிட்ட எந்தப்

2017 ஜூலை 4]

பணிகளும் நடைபெறாத சூழ்நிலை இருக்கின்றது. இதற்குக் காரணம், JCB போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றபோது, உயரழுத்த மின் கம்பிகளில் படுகின்ற அளவுக்கு அவை தாழ்வான உயரத்தில் இருக்கின்ற காரணத்தால் சுமார் 400 மீட்டர் நீளமுள்ள ஒரு சாலை போடப்படாமல் அப்படியே இருக்கிறது. இதன் காரணமாக, பொதுமக்கள் மிகவும் அச்சத்தோடு அந்தப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மேலே செல்கின்ற உயரழுத்த மின் கம்பிகளை பூமிக்கடியில் பதிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயரழுத்த மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன என்று சொல்கின்றார். JCB போன்ற இயந்திரங்களை வைத்து பணிகளைச் செய்கின்றபோது அது ஆபத்தாக இருக்கின்றது என்று சொல்கிறார். அப்படியிருந்தால் அதை ஆய்வு செய்து, அதனை உடனடியாக மாற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

124—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***696—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—